மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

18.10.2022 செவ்வாய்க்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

## தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய அமைச்சரவை உபகுழு நியமனம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்த அமைச்சரவை உபகுழுவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த சபையின் உறுப்பினர்களாக பிரதமர் தினேஷ் குணவர்தன, நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலம்பெயர் தமிழர்களின் பிரச்சினைகள், தமிழ் கட்சிகள் மற்றும் நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து நல்லிணக்கம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இந்த உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த மாத இறுதிக்குள் சாதாரண தர பரீட்சை பெறுபேறு

அடுத்த மாத இறுதிக்குள் 2022 ஆம் ஆண்டிற்கான கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். பாராளுமன்றில் இன்று உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார். பாடசாலை அதிபர்களால் தமது பரீட்சார்த்திகள் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்டவுடன், பெறுபேறுகள் வெளியிடப்படுமெனவும் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார். COVID-19 பெருந்தொற்று காரணமாக அடையாள அட்டை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டமையால், அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தை சமர்ப்பித்து பரீட்சைக்கு தோற்றுமாறு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தது.

02

## 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

பெற்றோலியப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தின் 2ஆவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 60 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 77 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

## இலங்கை கடற்பரப்பிற்குள் சீனக் கப்பல்

சீனக் கப்பலொன்று நாளை (புதன்கிழமை) அல்லது நாளை மறுதினம் இலங்கை கடலுக்கு வரவுள்ளதாக கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்து மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் இடிபாடுகளை மீட்பதற்காக இந்தக் கப்பல் நாட்டிற்கு வரவுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது. இடிபாடுகள் அகற்றப்படும் வரை இந்தக் கப்பல் இலங்கைப் பெருங்கடலில் பல மாதங்கள் இருக்கும் என்றும் அதன் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார். இதேவேளை, கப்பலில் தீப்பற்றியதையடுத்து சிதறிய 1700 மெற்றிக் தொன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு நீர்கொழும்பு, பமுனுகமவிற்கு அருகில் உள்ள கழிவு சேமிப்பு முற்றத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆய்வகங்களில் கழிவுகள் பிரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படும் என்றும் அதன் பின்னர் அதனை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

## கிழக்கு விவசாயிகளின் பிரச்சினை பாராளுமன்றில்

### முன்வைத்தார் எதிர்கட்சி தலைவர்



கிழக்கு மாகாண விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இன்று(18) பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்!

கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் இன்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகள். இலங்கையில் அனுராதபுரம், பொலன்னறுவை,அம்பாந்தோட்டை, குருநாகல் போன்ற மாவட்டங்களில் நெற் செய்கை பாரியளவில்

02

## கிழக்கில் 50ஆயிரம் ஏக்கர் காணிகள் ஆக்கிரமிப்பு



### பொத்துவில் கனகர் கிராம உலக உணவு தினத்தில் கருத்து

( வி.ரி சகாதேவராஜா)

சர்வதேச உணவு தினத்தை முன்னிட்டு, சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பு ,அம்பாறை மாவட்டத்தின் யுத்தத்தால் இடம்பெயர்ந்த கனகர் கிராம மக்களின் காணிகளில் தானியச் செய்கையை ஊக்குவிக்கும்

02




## இலங்கை இனக்கலவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இந்துத் தமிழர்களே

இலங்கை இனக்கலவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இந்துத் தமிழர்களே' என உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தெரிவித்துள்ளது. இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணொருவர் இந்திய குடியுரிமை கோரி தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் விசாரித்த போதே இதனைத் தெரிவித்துள்ளது. திருச்சியைச் சேர்ந்தவர் அபிராமி, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்

குறித்த மனுவில் "எனது பெற்றோர் இலங்கை குடிமக்கள். இனக்கலவரம் காரணமாக இந்தியாவுக்கு வருகை தந்தனர். நான் 1993ஆம் ஆண்டு திருச்சியிலுள்ள மருத்துவமனையில் பிறந்தேன். இந்தியாவில் 29 ஆண்டுகளாக வசிக்கிறேன். பாடசாலைப் படிப்பை இங்கு தான் முடித்தேன். எனக்கு

02

## கோபா குழுவிலிருந்து சாணக்கியன் விலகல் - சிறிதரன் நியமனம்

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலிருந்து (கோபா) நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் விலகியுள்ளார். நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமானதும் இந்த விடயம் தொடர்பாக சபாநாயகரின் அறிவித்தலை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ அறிவித்தார். இதனையடுத்து, அவரது வெற்றிடத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் உறுப்பினராக பரிந்துரைக்கப்பட்ட கலாநிதி ஹர்ஷ டி சில்வா அந்தப் பதவியில் இருந்து விலகியுள்ளார். அந்த வெற்றிடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரித ஹேரத்தின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில் 50ஆயிரம் ஏக்கர்

வேலைத்திட்டத்தை மேற்கொண்டது. இதற்கமைய கனகர் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவதற்கு பல்வேறு எதிர்ப்புக்களைச் சந்தித்த மக்கள் தற்போது துணிச்சலாக தமது காணிகளை துப்பரவு செய்து வருகின்றனர். இவ்வாறு தமது பூர்வீக காணிகளை துப்பரவு செய்துள்ள 25 பயனாளிகள் தானியச் செய்கைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயறு,சோளன்,கச்சான் ஆகிய தானிய வகைகள் வழங்கப்பட்டதோடு அம்மக்களின் காணிகளில் அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தித் தரக்கோரி அரசதிணைக்களங்களுக்கும் பரிந்துரை செய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்டது.

இருந்தாலும் அரச திணைக்களங்கள் மக்கள் மீளக்குடியேறுவதற்கு எதிர்ப்பாக உள்ளமையால் மக்களாகவே தமது பூர்வீக காணிகளில் இன்று பயிர்ச்செய்கையை ஆரம்பித்து சுமார் 32 வருடங்களுக்குப் பின் காணிகளில் குடியேறியுள்ளனர். இம்மக்கள் மீளக்குடியேறுவதற்கு பக்க பலமாக உள்ள சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பிற்கு நன்றியைத் தெரிவித்ததோடு தமது பூர்வீக காணிகளை இனி எந்த சந்தரப்பத்திலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதையும் உறுதியாகக் கூறினர்.

**கிழக்கில் 50ஆயிரம் ஏக்கர் காணிகள் ஆக்கிரமிப்பு**

உலக உணவு தினத்தை முன்னிட்டு திட்டமிடப்பட்டுள்ள பரிந்துரை செயற்பாடுகளும் இயற்கை விவசாயச் செய்கை ஊக்குவிப்பு தொடர்பாக சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் பிரதிநிதி வு..காத்தவராயன் கூறுகையில்... சர்வதேச உணவு தினம் அனுஸ்டிக்கப்படுகின்ற இவ்வாறான

நிலையில் இதற்கு மறுபுறம் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் மோசமாகும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த நிலை காரணமாக மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு வேளை உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மக்கள் பெரும் போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை தமக்கான சரியான அரசியல் தீர்வு கிடைக்காத நிலையில் மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த நிலைக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு காரணமாக அமைந்தாலும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு தரப்பினராலும் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் முக்கிய காரணமாகும். கிழக்கைப் பொறுத்த வரையில் சுமார் 50000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் அரசு மற்றும் பல்வேறு தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் காரணமாக தமக்கான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். பல்வேறு வழிகளிலும் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படுமாயின் அவர்களின் வீட்டுத் தேவைக்கான உணவையேனும்

உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும் என்பது உறுதியான விடயமாகும். இந்த நிலையை எமது அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டியது முக்கிய விடயமாகும். என்றார்.

## கிழக்கு விவசாயிகளின் பிரச்சினை பாராளுமன்றில்

மேற்கொள்ளப்பட்டாலும் நாட்டின் மொத்த அரிசி உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை (**25%**) கிழக்கு மாகாணமே வழங்குகிறது. இருப்பினும்,பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது இந்த பகுதிகளில் விதைப்பு மற்றும் அறுவடை முன்கூட்டியே செய்யப்படுவதால்,அந்த விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலையும்,பயிர்களுக்குத் தேவையான உரங்களின் அளவும் சரியான நேரத்தில் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. முந்தைய அரசாங்கத்தின் அறிவியல்பூர்வமற்ற முடிவுகளால் ஒட்டுமொத்த விவசாயமும் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதோடு,இன்றும் ஒட்டுமொத்த மக்களும் அதன் விளைவுகளை அனுபவித்து வருகின்றனர். சிறு/பெரும் பிரதான போகங்களுக்கும் மேலதிகமாக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் இந்த விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் வீழ்ச்சியடைந்த விவசாயத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்.மேலும், இது வேகமாக அதிகரித்து வரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்தி,சந்தையில் அரிசிக்கு நிலையான விலையை ஏற்படுத்தவும் உதவும்.

அதற்கிணங்க,இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, அரசாங்கத்திடமிருந்து பின்வரும் கேள்விகளுக்கு குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

01.அம்பாறை,மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் சிறு மற்றும் பெரும் போக பருவங்களில் நெல் அறுவடை முதலில் பெறப்படுவதால் அறுவடைக்கு உரிய விலை கிடைப்பதில்லை எனவும்,விற்பனை செய்வதும் சிரமமாகவே உள்ளதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.அப் பகுதிகளிலும் பிற பகுதிகளிலும் நெல் அறுவடையை முறையான முறைப்படி கொள்வனவு செய்வதற்குரிய தடைகள் என்ன? அந்த தடைகளை நீக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

02.கிழக்கு மாகாணத்தில் சிறுஃபெரும் போக பருவங்களுக்கு முன்னர் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள்உரியநேரத்தில்கிடைப்பதில்லைஎனவிவசாயிகள்தெரிவிக்கின்றனர்.இந்த நிலையை தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது?

03.2022ஃ23 பெரும் போக பருவ நெற்செய்கைக்குத் தேவையான யூரியா,**MOP**, மற்றும் **TSP** உரங்களின் அளவு என்ன? அவற்றில் எந்தளவு தொகை தற்போது நாட்டில் கையிருப்பில் உள்ளது? மீதமுள்ள தொகையை பெற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? அந்த உரங்களை விவசாயிகளுக்கு வழங்கி வைக்க முடியுமான கால எல்லை யாது?

04.தற்போதைய அரசாங்கத்தின் விவசாய கடன்களை தள்ளுபடி செய்யும் தீர்மானமானது

1 ஏக்கர் வரை விவசாயம் செய்த விவசாயிகளுக்கு மாத்திரமா செல்லுபடியாகும்?அப்படியானால்,ஒரு ஏக்கருக்கு அதிகமாக மேற்கொண்ட பயிர்களுக்குகடன்தள்ளுபடியைவழங்கமுடியாதா?இதன்கீழ்தனியார்வங்கிகளின் ஊடாக பெற்ற விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படுமா?அவ்வாறு இல்லையென்றால்,அந்த விவசாயிகளுக்காக அரசாங்கத்தால் எடுக்க முடியுமான நடவடிக்கைகள் என்ன?

05.காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் நெல் மற்றும் இதர விவசாய பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அப்படியானால்,மொத்த உற்பத்தியில் சதவீதமாக அந்தத் தொகை எவ்வளவு? அதைத் தடுக்க அல்லது குறைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது? அவ்வாறு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லையாயின்,அதற்கான காரணங்கள் என்ன?உலர் வலய பகுதியிலுள்ள நீர்பாசன வாய்க்கால்களிலும் மணல் அகழ்வு நடப்பதால் நீர்பாசனமும்,

அப்பகுதிகளிலுள்ள பயிர்ச் செய்கைகளும் கடுமையாக சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.இது தொடர்பாக விவசாய அமைச்சுக்கோ அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கோ தெரியுமா? இந்த மணல் கடத்தலை தடுக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## இலங்கை இனக்கலவரத்தில் பெரிதும்

ஆதார் அட்டை வழங்கப்பட்டது.

இதனையடுத்து இந்திய குடியுரிமை வழங்கக்கோரி திருச்சி கலெக்டருக்கு மனு அனுப்பினேன். அதை தமிழக அரசின் பொதுத்துறை, வெளிநாட்டினர் விவகார பிரிவு செயலருக்கு அனுப்ப உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் கூறியிருந்தார். அம் மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் கூறியதாவது:" மனுதாரர் புலம்பெயர்ந்த பெற்றோரின் வழித்தோன்றல் என்றாலும், அவர் இந்தியாவில் பிறந்தவர். அவர் ஒருபோதும் இலங்கை குடிமகளாக இருந்ததில்லை. மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்படாவிடில், அவர் நாடற்றவர் என்ற நிலைக்கு வழிவகுக்கும். அச்சூழ்நிலையை தவிர்க்க வேண்டும். இந்தியாவில் மத்திய அரசு சமீபத்தில் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்தது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேசம் போன்ற அண்டை நாடுகளில் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டு இந்தியாவில் குடியேறிய சிறுபான்மையினர் தற்போது இந்தியக் குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

குடியுரிமை சட்டத் திருத்தத்திற்குள் இலங்கை வரவில்லை என்றாலும், அதே கொள்கை அவர்களுக்கும் சமமாகப் பொருந்தும். இலங்கை இனக்கலவரத்தில் பெரிதும் இந்துத் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர் என்பதை நீதித்துறை கவனத்தில் கொள்கிறது. மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிப்பதில் எந்த தடையும் இருக்க முடியாது. மனுதாரரின் விண்ணப்பத்தை மத்திய அரசின் இறுதிப் பரிசீலனைக்கு அனுப்ப மாநில அரசுத் தரப்பில் மறுத்திருக்கக்கூடாது. மனுதாரரின் கோரிக்கைக்கு விதிவிலக்கு அளிக்க முடியாது. மனுதாரரின் விண்ணப்பத்தை திருச்சி கலெக்டர் மாநில பொதுத்துறை செயலருக்கு அனுப்ப வேண்டும். அவர் மத்திய உள்துறை செயலாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் 16 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் உத்தரவிட்டார்.

## அடுத்த மாத இறுதிக்குள் சாதாரண தர பரீட்சை பெறுபேறு

இந்த நிலையில், இவ்வாறு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு அடையாள அட்டையை சமர்ப்பித்து பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இன்று பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதற்கு பதில் வழங்கிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல்களுக்கு அமைய, பெறுபேறுகள் வெளியிடப்படும் என கூறினார். இதனால் பரீட்சார்த்திகள் தேவையற்ற வகையில் அச்சமடைய அவசியம் இல்லை எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டினார்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com
செவ்வாய்க்கிழமை
சுபீட்சம் 18 அக்டோபர் 2022


# ஒரு லீற்றர் தண்ணீரின் விலை 160 அதே அளவு பாலின்விலை 110 ரூபாய்







எமது பண்ணையாளர்கள் கடந்த காலங்களில் 10 தொடக்கம் 20 லீற்றர் பால் கறக்கும் மாடுகளை வளர்த்து வந்தார்கள் ஆனால் தற்போது அனைத்து கால்நடை தீவினங்களுக்கும். மருந்துப் பொருட்களுக்கும் அதிக விலையேற்றம் காரணமாக மாடுகளை விற்பனை செய்து கொண்டு வருகின்றார்கள். இதனால் எமது பகுதியில் பாலுற்பத்தி மிக வேகமாக குறைவடைந்து கொண்டு செல்கின்றது. எமது பண்ணையில் எமது பகுதியிலிருந்து நாளாந்தம், சுமார் 500 லீற்றல் பாலைச் சேகரித்து வந்தோம், தற்போதைய நிலையில் 200 இற்குக் குறைவான லீற்றர் பால்தான் ஒரு நாளைக்குச் சேகரிக்கப்படுகின்றன. என மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் கணேசபுரத்தில் இயங்குகின்ற பிள்ளையார் பாற் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி பாற்பண்ணையாரள்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பில் மேற்படி பாற்பண்ணையில் வைத்து ஞாயிற்றுக்கிழமை(16) நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். இதன்போது அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், தற்போது எமது பண்ணையாளர்கள் மாடு வளர்ப்பை தொடர்ந்து மேற்கொள்வதா கைவிடுவதா என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதர்கள். கடந்த காலங்களில் மாடுகளுக்குரிய உணவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருக்கவில்லை மாறாக தற்போது ஒரு லோட் வைக்கோல் 15000 ரூபா, ஒரு கிலோ தவிடு 120 ரூபா, மருந்துகளின் விலை மூன்று மடங்காக அதிகரித்துள்ளன, ஒரு லீற்றர் தண்ணீர் தோத்தலின் விலை 160 ஆனால் ஒரு லீற்றர் பாலின்விலை 110 ரூபாய். இவ்வாறுதான் நிலமை செல்கின்றது. இச்சூழலில் எம்மால் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாமலுள்ளது. கிராமிய பொருளாதாரக் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும், பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம் சொல்கின்றது. ஆனால் அதனை செயல் வடிவில் கொண்டு வருகின்றார்களில்லை. எமக்கு அரசாங்கம் உதவ முன்வராவிட்டால் எமது பகுதியில் பாலுற்பத்தி இல்லாமல் போகும் நிலமை ஏற்படும். பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம் தெரிவித்தபோது எமது பண்ணையாளர்கள் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று கறவைப் பசுக்களை கொள்வனவு செய்தார்கள். தற்போது பாறுக்கு நியாய விலைய இன்மையால் பெற்ற கடமையும் பண்ணையாளர்கள் மீளச் செலுத்த முடியாத நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதனால் எமது வாழ்வாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதோடு. எமது பின்னைகளின் கல்வி, சுகாதாரம், உள்ளிட்ட பல விடைங்களில் மாபெரும் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் நிலமைக்கு ஆளாகியுள்ளோம். எனவே அரசாங்கம் எமது பாலுற்பத்திக்கு விலையை குறைந்தது ஒரு லீற்றருக்கு 200 ரூபாவுக்கு மேலாவது அதிகரிக்க வேண்டும், இல்லையேல் நாம் எமது கால்நடைகள் அனைத்தையும் வீதிக்கு இறக்கி மாபெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோம். எனவே அரசாங்கம் கால்நடைகளின் மருந்துகள், ஏனைய உணவுப்பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். அவ்வாறெனில்தான் எமது பகுதியில் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியுமே தவிர இல்லையேல் நாங்கள் அனைவரும் மாடு வளர்ப்பைக் கைவிட்ட வேண்டிய நிலமை ஏற்படும். நாங்கள் எமது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடை வளர்ப்பைக் கைவிடும் பட்சத்தில் அரசாங்கம் எமக்கு மாற்று வாழ்வாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பின்னிற்கக் கூடாது எனவும் அப்பகுதி பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## சர்வதேச அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் கௌரவிப்பும் அவரது நூல் வெளியீடும் இலண்டனில்




**(அஷ்ரப் ஏ சமத்)**

உலகப் புகழ் அறிவிப்பாளர் பீ எச் அப்துல் ஹமீத் எழுதிய வானலைகளில் ஒரு வழிப் போக்கன் என்ற நூலின் அறிமுக விழா அண்மையில் லண்டனில் நடைபெற்றது. உலகத் தமிழ்க் கலையகமும் மற்றும் பிரித்தானிய முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு நூலாசிரியரை இரவு விருந்துபச்சாரம் வழங்கி கௌரவித்தது. கொஸ்மோ தலைவர் சாகிர் நவாஸ் உலகத் தமிழ்க் கலையகத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் படங்களைக் காணலாம்

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நூலக மற்றும் தகவல் வலையமைப்பு ஆலோசனைக் கூட்டம்



**நூருல் /ஹுதா உமர்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நூலக மற்றும் தகவல் வலையமைப்பு (**Library & Information Network (SERLIN)**) தொடர்பான ஆலோசனைக்கூட்டம் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நூலகர் எம்.எம். றிபாயித்தீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி.எம். அஸ்வர், ஏ.எம். நஹ்பிஸ், எஸ்.எல்.எம். சஜீர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பொது நூலகர்கள், பாடசாலைகளின் நூலகர்கள், கல்வியற் கல்லூரி நூலகர்கள், தொழில்நுட்ப கல்லூரி நூலகர், இலங்கை உயர் தொழிநுட்பவியற் கல்லூரி நூலகர், வலயக் கல்விப் பணிமனைகளைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் குறித்த செயற்றிட்டத்தின் முக்கியத்துவம் குறித்துச் சிலாகித்துப் பேசினர். இதன்படி நூலக மற்றும் தகவல் வலையமைப்புத் திட்டத்தின் இணைப்பாளர் கலாநிதி எம்.எம். மஷ்ரூபா இணைய வலையமைப்பினூடாக தென்கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து வகையான நூலகர்களையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார். இதன் மூலம் இப்பிரதேசத்திலுள்ள நூலகர்களை வலுவூட்டுவதுடன் சிறந்த சேவையினை வாசகர்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய பல்கலைக்கழக உபவேந்தர் சமகாலத்தில் நூலகங்களுக்கிடையேயான தகவல் வலையமைப்பு என்ற விடயம் மிகவும் அவசியமானது என்றும் இதன் மூலம் இப்பல்கலைக்கழகத்துக்கும் பல்கலைக்கழகத்தினைச் சுற்றியுள்ள சமூகத்துக்கும் இடையே உள்ள இடைவெளி குறைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். பல்கலைக்கழகம் தனது சமூகப் பங்களிப்பினை நிறைவேற்றிக் கொள்வதற்கு இச்செயற்றிட்டம் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் இத்திட்டம் மிகவும் திறம்பட இயங்குவதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பினையும் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். நிகழ்வின் முடிவில் குறித்த நூலக மற்றும் தகவல் வலயமைப்புச் செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இக்குழுவில் நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து அங்கத்தவர்களும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, நூலக மற்றும் தகவல் வலையமைப்பின் குறிக்கோள்கள், எதிர்பார்க்கப்படும் அடைவுகள், இலக்குக் குழுக்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் குறித்த திட்டத்தின் நிலைபேறான தன்மை போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன.

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

# சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு போசாக்கு திட்டம்



**(ந.குகதர்சன்)**

சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் பிரதேச செயலகம் தோறும் இடம் பெற்றது. இதன் அடிப்படையில் ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டமும் சௌபாக்கியா விஷேட வீடமைப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது. சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா கலந்து கொண்டதுடன் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.விஜிதன், கிராம சேவை அதிகாரிகள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். சௌபாக்கியா விஷேட வீடமைப்புத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இரண்டு லட்சத்தி இருபத்தையாயிரம் ரூபா நிதியளிப்பில் பயனாளியின் ஐந்து லட்சம் ரூபா நிதி பங்களிப்புடன் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம். சாஜஹான் தெரிவித்தார்.

# மண்முனை தென்மேற்கில் இலக்கிய விழா














கலாசார அலுவல்கள் திணைக்களமும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய 2022 ஆம் ஆண்டிற்கான பிரதேச இலக்கிய விழாவானது அண்மையில் பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் பிரதேச செயலாளர் தெட்சணகௌரி தினேஸ் தலைமையில் நடைபெற்றது. இதன் போது இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள், கலைஞர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டது. மேலும் தொலஸ் மஹே பகன வேலைதிட்டத்திற்கமைய உணவு ஊக்குவிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு தொடர்பான தேசிய வேலைதிடடத்திற்கு அமைவாக பழமரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22ஆவது ஆண்டு நினைவு நாளை மட்டக்களப்பில் அனுஸ்டிப்பு



படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 22வது ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு நாளை (19) திகதி காலை 10.00 மணியளவில் காந்திபூங்காவில் உள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் நினைவுதினம் அனுஸ்டிக்கப்படவுள்ளது. மட்டு.ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள நினைவுதின நிகழ்விற்கு ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கின்றனர் நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுவினர்.

# முகாமைத்துவ சேவை பதவி உயர்வு வழங்காமைக்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்



முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் (2019ஃ2020) தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்காமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (18) பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். 2019ஃ2020 பொது முகாமைத்துவ சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 690 பேரை நியமிப்பதற்குத் தேவையான அனைத்து நிர்வாகப் பணிகளும் 2022 மார்ச் 28 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாகவும், இது ஒரு புதிய ஆட்சேர்ப்பு அல்ல எனவும்,பொதுச் சேவையில் உள்ளக பதவி உயர்வாக அங்கீகரிக்கப்படக்கூடிய பதவிகளை வழங்குவதானது எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதனூடாக அரசாங்கம் எந்தவித மேலதிக ஒதுக்கீட்டையும் செலவிட வேண்டி வராது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட 3ஃ2022 சுற்றறிக்கையின் அடிப்படையில் கனிஷ்ட ஊழியர்களுக்கான பிரதான ஊழியர் உந்துதல்களில் ஒன்றான இந்த நியமனங்கள் நிறுத்தப்பட்டுள்ளமை நியாயப்படுத்த முடியாத ஒரு நிலைமையாகும் எனவும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார். இந்த நியமனங்களில் தாமதம் காரணமாக அநீதி மற்றும் தமது தொழில் சார் உரிமைகள் பறிக்கப்பட்ட ஆரம்ப தர உத்தியோகத்தர்களுக்கு விசேட கவனம் செலுத்தி,இந்த பதவி உயர்வுகளை கூடிய விரைவில் வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

# மன்னாரில் வங்காலை மீனவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார்மாவட்டத்தில்வங்காலைகிராமமீனவர்களுக்குஇங்கு வரும் எரிபொருளை சரியான முறையில் பகிர்ந்தளிப்பதில்லையென தெரிவித்தும் இதனால் மீனவர் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதை கண்டித்தும் இதற்கு அமைச்சர் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி வங்காலை கிராம மீனவர்கள் பல நூற்றுக்கணக்கானோர் கவனயீப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். செவ்வாய் கிழமை (18.10.2022) காலை இடம்பெற்ற இவ் போராட்டம் மன்னார் தீவு நுழைவாயிலாக விளங்கும் பாலத்திலிருந்து கடற்தொழில் நிரியல் வள திணைக்களத்துக்கும் மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்துக்கும் சென்று மகஜர்களை கையளித்தனர்.

இவ் மீனவர்கள் இவ் கவனயீர்ப்பு போராட்டத்தின்போது பல வாசகங்கள் கொண்ட பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான போராட்டமாக முன்னெடுத்துச் சென்றனர். வங்காலை மீனவர்களாகிய நாங்கள் இன்று செவ்வாய் கிழமை (18.10.2022) ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்ததுக்கு காரணம் மீனவர்களாகிய எங்களுக்கு எரிபொருள் பற்றாக்குறையால் தொழில் செய்ய முடியாத நிலை இருந்து வருகின்றது.

எங்கள் கிராமத்தில் ஆயிரம் மீனவ குடும்பங்கள் இருக்கின்றன. எங்களுக்கு பத்து நாளைக்கு ஒரு முறை கிடைக்கும் ஐந்து லீற்றர் மண்ணெணெயை சேர்த்து வைத்துதான் நாங்கள் தொழிலுக்கு செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது. இனிவரும் காலம் எங்களுக்கு மீன்பிடிக்கான பருவ காலம் இதைக் கவனத்தில் எடுத்த நிலையில்

நீரியல் வளத்துறை அமைச்சர் , இதன் திணைக்களம் மற்றும் அரசாங்க அதிபர் உற்பட யாவருக்கும் எங்கள் அவலநிலையை எடுத்துக்காட்டும் முகமாக நாங்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். பதினைந்து நாளைக்கு ஒரு முறை ஆயிரம் லீற்றர் மண்ணெணெய் மட்டுமே வங்காலை மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஏற்கனவே எரிபொருள் தட்டுப்பாடான காலத்தில் எமக்கு இரண்டாயிரம் தொடக்கம் மூவாயிரம் எரிபொருள் தரப்பட்டதில் தற்பொழுது இவை குறைக்கப்பட்ட நிலையிலேயே மீன்பிடிக்கான எரிபொருள் தரப்படுகின்றது. எங்களிடம் இருநூறு படகுகள் காணப்படுகின்றன. இவற்றுக்கு இவற்றை பிரித்துக் கொடுத்தால் ஒரு முறைக்கு ஐந்த லீற்றர் மண்ணெணெய்யே கிடைக்கப் பெறுகின்றது. அதுவும் பதினைந்து நாளைக்கு ஒருமுறை. இந்த எரிபொருளை வைத்தக் கொண்டு எமது மீனவர்கள் நாளாந்த தொழிலில் ஈடுபட முடியாது.

ஆகவே எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வரும் எரிபொருளை சரியான முறையில் பங்கீடு செய்ய வேண்டும் என நாங்கள் கேட்டு நிற்கின்றோம். மேலும் நாங்கள் எரிபொருள் நிலையத்துக்குச் சென்று இது தொடர்பாக விசாரிக்கும்போது அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில் தனியார் தங்களுக்கு டொலர் வழங்கி எரிபொருள் எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனாலேயே முன்னையவிட தற்பொழுது உங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் குறைக்கப்பட்டுள்ளது எனவும் எமக்கு தெரிவிக்கப்படுகின்றது என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.




# சிங்கப்பூர் வாழ் தமிழ் உறவுகளினால் நன்கொடை



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

சிங்கப்பூர் வாழ் தமிழ் உறவுகளினால் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பேரிலாவெளி, குடும்பிமலை கிராமசேவையாளர் பகுதியில் உள்ள சுமார் 150 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் 14ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது. இவ் நிகழ்வினை 93ம் ஆண்டு புனித மிக்கேல் கல்லூரி , சிவானந்தா பாடசாலை மற்றும் மெதடிஸ்த மத்திய கல்லூரியின் கல்வி கற்ற பழைய மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. கிரான் பிரதேச செயலாளர் ராஜ்பாவு தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் சமுத்தி உத்தியோகத்தர்கள் பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்டத்துக்கு தெரிவான அம்சாத் கௌரவிப்பு



(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்திய மாகாண மட்டசமூக விஞ்ஞான போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவான சம்மாந்துறை மஜீட்புர மகா வித்தியாலய மாணவன் கே.எம். அம்சாத் கௌரிக்கப்பட்டார். சம்மாந்துறை வரையத்தில் மிகவும் பின்தங்கிய தனிமைப்படுத்தப்பட்ட கிராமமான மஜீட்புரத்திலுள்ள மகா வித்தியாலயத்தில் தரம் 12–ல் படிக்கும் கே .எம். அன்சாத் என்ற மாணவனே உயர்தரபிரிவிலே முதலிடத்தை பெற்று தேசியமட்டத்துக்கு தெரிவாகி இருக்கின்றார் .

இவரை கௌரவிக்கும் நிகழ்வு இன்று(18) செவ்வாய்க்கிழமை பாடசாலையில் நடைபெற்றது. சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீரின் வழிகாட்டலில் பிரதி கல்வி பணிப்பாளர் ஏஎல்ஏ.மஜீட் தலைமையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. மஜீட்புர மகா வித்தியாலய உயர்தர மாணவன் அம்சாத் சம்மாந்துறை வலயத்தில் இருந்து தெரிவான ஒரேயொரு மாணவராவார். அவருக்கு மாலை சூட்டி பாராட்டி கௌரவித்தனர். நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ரியால் ,சகாதேவராஜா கோட்டக் கல்விப் பணிப்பாளர் சபூர்தம்பி வலயத்தில் சமூக விஞ்ஞானப்பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களான நிசார் , ஈசிபு உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். எதிர்வரும் சனிக்கிழமை களுதாவளை மகாவித்தியாலயத்தில் தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டி நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு 12 அல்ஹிக்மா தேசியக் கல்லூரியில் பாராட்டுவிழா




(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு 12 அல்ஹிக்மா தேசியக் கல்லூரியில் க.பொ.த.உயர்தரம் 2021ல் 3 பாடங்களிலும் ஏ சித்திபெற்ற மாணவர்களையும், உயர்தர பாடங்கள் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபரையும் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு .வாழைத்தோட்டம் கல்வி அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந் நிகழ்வு கடந்த ஞயிற்றுக்கிழமை 16, மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ,பாராளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும் ,தேசிய விளையாட்டு கவுன்ஸில் தலைவர் அர்ச்சுன ரணதுங்க மற்றும் உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் கல்லூாி அதிபர் முல்லை முஸ்ரிபா , எஸ்.எஸ்.டி.எப் இன் கல்லூரி ஆளுநர் டாக்டர் நஸீஹா அமீன், சேஃப்டி ப்ளஸ் உரிமையாளர் அல்ஹாஜ் எம்.எச். நூருல்ஹக் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். பழையமாணவரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான சியா உல் ஹசன் இந் நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

அல் ஹிக்மா கல்லூரியின் பழைய ஆசிரியர்கள் ,பிரதேச நலன் விரும்பிகள் மாணவர்கள் பெற்றோர்கள்,பழைய மாணவர்கள், எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.மாணவர்களின் கலை நிகழ்வுகள் பலவும் இடம்பெற்றன. இக் கல்லூரியை தேசிய கல்லூரியாக்குவதற்கான திட்டத்தினை அரசுக்கு முன்மொழிந்து அதனைப் பாராளுமன்றத்தில் பேசி அதனைப் பெற்றுக் கொடுத்தவர் முன்னாள் அமைச்சர் ரவுப் ஹக்கீமையே சாரும். 3 பாடங்களில் மூன்று ஏ சித்திபெற்ற மூன்று மாணவிகளுக்கும் பணப் பரிசில்கள் மடிக் கனனிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# சதொசமனித புதை குழியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு காணாமல்போன அலுவலகம் நிதி அனுசரனை வழங்க திட்டம்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் சதொச மனித புதை குழியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு காணாமல் போன அலுவலகம் முன்னையப் போன்று நிதி அனுசரனை வழங்க திட்டம் கொண்டுள்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே அடுத்த தவணையில் இவ் அகழ்வு பணி எப்பொழுது ஆரம்பிக்கப்பட வேண்டும் என பொலிசார் மன்றுக்கு அறிக்கையிட வேண்டும் என கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு மன்னார் நகருக்குள் கண்டு பிடிக்கப்பட்ட மனித சதொச புதைகுழி வழக்கு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அப்துல் சமட் கிபத்துல்லா முன்னிலையில் திங்கள் கிழமை (17.10.2022) விசாரனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கு தொடர்பாக ஏற்கனவே மன்று இவ் புதைகுழி அகழ்வு பணியில் தலைமை தாங்கி முன்னெடுத்த சட்டவைத்திய அதிகாரி ராஜபக்ச அவர்களுக்கு அழைப்பானை விடுக்கப்பட்ட நிலையில் நேற்று (17) திங்கள் கிழமை இவர் மன்றில் முன்னிலையாகி இருந்தார். 18.05.2022 அன்று இது தொடர்பான அறிக்கை ஒன்றை தான் மன்றுக்கு அனுப்பி வைத்திருந்ததாக சட்டவைத்திய அதிகாரி ராஜபக்ச மன்றில் தெரிவித்திருந்தார். அத்துடன் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டதுக்கு அமைவாக இவ் புதை குழியை மீண்டும் அகழ்வு செய்வதற்கு என்னென்ன தேவை என்றும் ஏந்தெந்த திணைக்களங்களின் உதவிகள் தேவைப்படுகின்றது அதற்கான செலவுகளின் அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டிருந்தது. இவ் அறிக்கை தொடர்பாக நீதிமன்றம் மன்னார் பொலிசாருக்கு ஒரு உத்தரவை வழங்கி இருந்தது. அதாவது, இவ் சதொச மனித புதை குழி அகழ்வு பணி மீண்டும் எப்பொழுது ஆரம்பிப்பதன் தொடர்பாக எதிர்வரும் இது தொடர்பான வழக்கில் தெரிவிக்கப்பட வேண்டும் என மன்று பொலிசாருக்கு கட்டளையிடப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சார்பாக இவ் மன்றில் ஆஜராகி இருந்த சட்டத்தரனி திருமதி புராதினி நீதிமன்றில் தெரிவிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் இவ் அகழ்வு பணிக்காக உதவும் நோக்குடன் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான திட்டம் இருப்தாகவும், இதற்கான கோரிக்கை ஒன்று விடும் பட்சத்தில் காணாமல் போன அலுவலகம் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட திட்டத்திற்கமைய இவ் அகழ்வு பணிக்கான நிதி அனுசரனை வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நீதிமன்றம் இவ் வழக்கை நவம்பர் மாதம் 30ந் திகதி (30.11.2022) அழைக்கும்போது இவ் சதொச புதைகுழியை எப்பொழுது ஆரம்பிப்பது என தெளிவாக தெரிவிக்கப்பட வேண்டும் என உத்தரவு இட்டுள்ளது. என வழக்கின்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பில் ஆஜராகிவரும் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ். நிரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார். கடந்த 2018 ஆம் ஆண்டு மன்னார் நகரில் சதொச கட்டிடத்துக்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் கட்டிட வேலை இடைநிறுத்தப்பட்டு மனித எச்சங்களுக்கான அகழ்வு வேலைகள் மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் முன்லையில் இடம்பெற்று வந்த நிலையில் மீண்டும் இவ் வழக்கு விசாரனைக்கு அழைக்கப்பட்டுள்ளது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவ் வழக்கின்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ்.நிரஞ்சன் மற்றும் றனித்தா ஞானராஜ் ஆகியோரும் காணாமல் போனோர் அலுவலகம் சார்பில் சட்டத்தரனி புராதினியும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்களும் முன்னிலையாகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் மேராவுக்கு கௌரவிப்பு



கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட தமிழ்த்துறை விரிவுரையாளராக நியமனம் பெற்று கடமையை அண்மையில் பொறுப்பேற்றிருந்த கலாநிதி த.மேகராசாவை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட நாவற்காடு நாமகள் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் அண்மையில் கௌரவித்திருந்தனர். குறித்த பாடசாலையில் கடமையாற்றிய நிலையிலேயே விரிவுரையாளராக நியமனம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது வாழ்த்துமடலும் வழங்கி வைக்கப்பட்டது.

# மக்களிடம் உறிஞ்சும் அரசாங்கம் குறித்து வெட்கப்பட வேண்டும்




## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான்



(அப்ரா அன்சார்)

மக்களுக்கு உதவுவதைவிட மக்களிடம் இருந்து உறிஞ்சி தம்மை வளப்படுத்திக் கொள்ளும் அரசு நம் நாட்டில் இருப்பது குறித்து அனைவரும், வெட்கமும் வேதனையும் அடைய வேண்டியுள்ளது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கம் என்பது பொதுமக்கள் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறை செலுத்தி பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கம் பல்வேறு புதிய வரிகளை அமுல்படுத்தி பொதுமக்களை உறிஞ்சத் தயாராகி வருகின்றது. அரசாங்கம் கஷ்டத்தில் இருக்கும் போது பொதுமக்கள் வரிகளை செலுத்தி அரசாங்கத்துக்கு உதவ வேண்டியது முக்கியம் தான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இந்த அரசாங்கம் தங்களது கட்சி சார்ந்தவர்கள் சுகபோகம் அனுபவிப்பதற்கான எற்பாடு தொடர்ந்து முன்னெடுத்து அதனால் ஏற்படும் செலவுகளை ஈடு செய்ய பல்வேறு வரிகளை பொதுமக்கள் மீது சுமத்த முனைவது எற்றுக் கொள்ள முடியாதது.

எப்போதோ கலைக்கப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து தேர்தல் நடத்தப்படும் வரை விசேட ஆணையாளர்களின் கீழ் இவற்றைக் கொண்டு வந்திருந்தால் மாதாந்தம் பல நூறு மில்லியன் ரூபாய்களை மீதப்படுத்த முடியும். தமது கட்சி ஆதரவாளர்கள் மாதாந்தம் கொடுப்பனவுகள் பெற வேண்டும். வரப்பிரசாதங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அவற்றை கலைக்காமல் நீடித்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமானது எனக் கேட்க விரும்புகின்றேன். நாடு இப்போது இருக்கும் சூழ்நிலையில் பெரிய அமைச்சரவையும், பெரிய எண்ணிக்கையிலான பிரதி அமைச்சர்களும் தேவையில்லை. எனினும் அரசாங்கம் தமது கட்சிக்காரர்களைத் திருப்திப் படுத்த வேண்டும் என்பதற்காக பெரிய அமைச்சரவையையும், அதிக பிரதி அமைச்சர்களையும் நியமித்துள்ளது. இதற்காக மாதாந்தம் சுமார் 100 மில்லியன் ரூபாய்களை செலவிடுகின்றது.

ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிக்கக் கூடாது என்று கூறும் அரசாங்கம் ஓய்வுபெற்ற தமக்கு நெருங்கியவர்களை அமைச்சு செயலாளர்களாவும், திணைக்களத் தலைவர்களாகவும் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து மேலதிக செலவுகளைச் செய்து வருகின்றது. இந்த செலவுகளை ஈடுசெய்வதற்காகவே அரசு புதிய புதிய வரிகளை மக்கள் மீது அமுல் படுத்துகின்றது. இன்னொரு வகையில் சொல்வதென்றால் தங்களது சுகபோகத்திற்காக மக்களைச் சுரண்டும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இதனை பொதுமக்களும், அரச உத்தியோகத்தர்களும் ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது குறித்து சிந்திக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ் புலமையாளர்களை கௌரவித்த இஸ்லாமிய வங்கி



(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட வீரமுனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய புலமையாளர்களை சம்மாந்துறை இஸ்லாமிய வங்கி ஒன்று பாராட்டி கௌரவித்திருக்கின்றது . சம்மாந்துறை மஸ்ரபுல் இஸ்லாமிய்யா சிக்கன கடன் கூட்டுறவு சங்கம் இவ்வாறு புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவித்தது. கல்லூரி அதிபர் திருமதி சத்யா செந்தமிழ்செல்வன் தலைமையில் நேற்று ஆராதனை மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது. பிரதம அதிதியாக வலய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ரப், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜலால்தீன், இஸ்லாமிய வங்கியின் தலைவர், முன்னாள் தவிசாளர் இப்ராஹிம் ,உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, உறுப்பினர்களான ராசிக் ,அமீர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள். கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கு மேல் எடுத்த அனைத்து மாணவர்களுக்கும் பதக்கம், உண்டியல் ,புத்தகம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இன ஐக்கியத்திற்காக தொடர்ந்து பாடுபட்டு வரும் இஸ்லாமிய வங்கிக்கு அங்கு உரையாற்றிய அனைவரும் பாராட்டு தெரிவித்தார்கள். இடையிடையே மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. பிரதி அதிபர் திருமதி அருந்தவவாணி சசிக்குமார் நன்றி உரையாற்றினார்.

# கலைகளை வளர்த்துக்கொள்கின்ற அதேவேளை, சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்

## மாகாண பணிப்பாளர் சரண்யா சுதர்சன் தெரிவிப்பு

(பைஷல்இஸ்மாயில்)

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள கலைஞர்களின் படைப்புக்களும், அவர்களின் செயற்பாடுகளும் நாளாந்தம் கூடியவண்ணம் சென்றுகொண்டிருக்கின்றது. ஆனால், திருகோணமலை மாவட்ட கலைஞர்களின் படைப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தெரிவித்தார். கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இளைஞர் அபிவிருத்தி "அகம்" இணைந்து திருகோணமலை மாவட்ட கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நாடகமும், அரங்காற்றுகைக்குமான போட்டியொன்றை மாவட்ட ரீதியாக நடாத்துவது தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் நேற்று மாலை (17) மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள கலைஞர்களின் படைப்புக்களை தேர்ந்தெடுப்பதில் பாரியசிக்கல்நிலை இருக்கின்றது. ஏனென்றால் போட்டிக்கு வருகின்ற எல்லாப்படைப்புக்களும் திறன்வாய்ந்ததாகவே இருக்கின்றது. ஆனால், திருகோணமலை மாவட்டத்தில் இந்நிலை இருப்பதில்லை. அவர்களின் படைப்புக்கள் மிகக் குறைவாகவே போட்டிக்கு வருகின்றதென்று மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் சுட்டிக்காட்டினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கலைகளை வளர்த்துக்கொள்கின்ற அதேவேளை, எமது படைப்புக்கள் மூலம் சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாகவும், நன்மைகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டும். சமூக உரிமை, பால்நிலை சமத்துவத்துடன் கூடிய இளைஞர்களின் பங்களிப்புக்கள், பிள்ளைகளின் நலனில் இளையோரின் பங்களிப்புகள் எவ்வாறு அமையவேண்டும், கிராமிய வாழ்க்கை முறையுடன் சமூக அபிவிருத்தி பற்றிய தகவல்கள், இயற்கை வளங்களை பாதுகாப்பது தொடர்பான விடயங்கள், பெரியோர்கள் வழிகாட்டலால் இளைஞர்களின் வளர்ச்சி, சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்திகள் போன்ற விழிப்புணர்வு விடயங்களை கருப்பொருளாகக் கொண்டு உங்களின் படைப்புக்கள் இடம்பெறுமாக இருந்தால் அதில் பல நன்மைகளுண்டு. மேலும், சமூகங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு, இளவயது திருமணம், போதைப்பொருள் பாவனை, பாலியல் துஸ்பிரயோகம், இனரீதியான மோதல்கள், மொழி தொடர்பான அறிவின்மை, வேலைவாய்ப்பின்மை, பாடசாலை இடைவிலகல், பொருளாதார நெருக்கடி, அதிகரித்த தொலைபேசிப் பாவனை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இன்று இளைஞர்கள் மத்தில் காணப்படுகின்றது. இதனால் இன்றைய இளம் சந்ததியினர் சமூகச் சீர்கேட்டிற்கு ஆளாகிச் செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனை முன்வைத்து உங்களின் படைப்புக்கள் அமையவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.



இளைஞர் அபிவிருத்தி "அகம்" நிறுவனத்தின் இணைப்பாளர் பொ.சற்சிவானந்தம், சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்களான க.அன்பலகன், வீ.கோணஸ்வரன், வி.குணபாலா மற்றும் திருகோணமலை மாவட்ட கலைஞர்கள் பலர் கலந்துகொண்டு தங்களின் கருத்துக்களை தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# போசாக்கான உணவுத்திட்ட பிரேரணைக்கமைவாக கல்முனையில் புதிய வகை விஸ்கட்டுக்கள் அறிமுகம்



நூருல் /ஹுதா உமர்

கடந்த 2022.10.15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வழங்கப்பட்ட போசாக்கான உணவுத்திட்ட பிரேரணைக்கமைவாக 2022.10.17ஆம் திகதி கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களினால் போசாக்கான விஸ்கட்டுக்கள் பரிசீலனைக்காக வழங்கப்பட்டன. கல்முனை பிராந்திய ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ நபீல் அவர்களின் மருந்து உற்பத்திப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட குறித்த விஸ்கட்டுக்கள்பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம். ஹனிபா, திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம். மாஹிர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர்.நியாஸ், நிருவாக உத்தியோகத்தர் கே.ஏ. ஜப்பார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்

# இலை கஞ்சி வழங்கி வைப்பு




(எம்.என்.எம்.அப்ராஸ்)

சர்வதேச வறுமை தினத்தை ஒட்டி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான போசனை உணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கல்முனை பிரதேச செயலகத்தின் கல்முனை சமுர்த்தி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட கல்முனை–05 /ஹுசைனியா முன்பள்ளி மாணவர்களுக்கு இலை கஞ்சி வழங்கும் நிகழ்வு (17 ) இடம்பெற்றது. கல்முனைப் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், விஷேட அதிதிகளாக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ்,சமுர்த்தி மகாசங்க முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.எஸ்.பரீரா,மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எம்.பாறுக்,சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம். நௌசாத்,வலய உதவி முகாமையாளர் ஐ.எல்.அர்சுத்தின்,பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.சமீம்,அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள் இதற்கான இதற்கான நிதி பங்களிப்பானது சமுர்த்தித சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் தனவந்தர்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# மண்முனைப்பற்றில் இடம்பெற்ற கலாசார மற்றும் இலக்கிய விழா







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடாத்திய கலாசார மற்றும் இலக்கிய விழா நிகழ்வு நந்தகோபன் கலாசார மண்டபத்தில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்த நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த் அவர்களும் கௌரவ அதிதிகளாக சுகாதார வைத்திய அதிகாரி த.பிரபாசங்கர், கோட்டக்கல்வி அதிகாரி சீ.தில்லைநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்ததுடன் மண்முனைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. எல். விவேகானந்தராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எம்.ஜெயசந்திரன், பாடசாலை அதிபர்கள், பிரதேச கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சிகரம் நூல் வெளியீடும், 8 கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றதுடன் இலக்கியபோட்டியில்வெற்றிபெற்றமாணவர்கள்மற்றும் கலைஞர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.